31.07.2025

அ.வ.எண். 232/2012

<u>வா.சா.1 மாயவன் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு தாக்கல் செய்தவதற்கு முன்பே வாரிசு சான்றிதழ் வேண்டி நான் வருவாய் துறையில் மனு கொடுத்தேன் ஆனால் அவர்கள் வாரிசு சான்றிதழ் கொடுக்கவில்லை. ஏன் அவர்கள் வாரிசு சான்றிதழ் கொடுக்கவில்லை என்றால் எனக்கு காரணம் தெரியாது. தற்போது நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 எதன் அடிப்படையில் எனக்கு கொடுத்தார்கள் என்று வருவாய் துறையில் விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரியல்ல. நான் எதன் அடிப்படையில் மேற்சொன்ன ஆவணம் பெற்றேன் என்றால் நான் என் அப்பா ராமதாஸ் இறப்பு சான்றிதழ் மற்றும் என் உடன்பிறந்தவர்களின் ஆவணங்கள் காண்பித்து பெற்றேன். ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை காட்டிதான் பெற்றேன்.

2. வா.சா.ஆ.10 ல் இறப்பு சான்றிதழ் மட்டும் தான் தாக்கல் செய்ததாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் மேற்சொன்ன அனைத்து ஆவணங்களும் கொடுத்தேன். 9ம் பிரதிவாதியை வருவாய் துறையினர் விசாரணை செய்யவில்லை என்றால் மனு கொடுத்தும் அவர்கள் வரவில்லை. அதனால் அதை பற்றி எனக்கு தெரியாது. வருவாய் துறையினரை கேட்டால்தான் தெரியும். வா.சா.ஆ.10 ன் உண்மை தன்மை நிரூபிக்க வருவாய் துறையினரை விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். இன்றைய தேதிவரை இந்நீதிமன்றத்தில் நான் ராமதாஸின் வாரிசு என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்னேன். ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை மற்றும் வேறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாரின் குடும்ப அட்டையை நீதிமன்றத்திலோ அல்லது வருவாய் துறையிலோ தாக்கல் செய்தேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை.

3. நான்தான் ராமதாஸின் வாரிசு என்பதை காட்டுவதற்கு வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிரைய ஆவணம் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் வேறு பட்டா எதுவும் என் பெயரில் இல்லை. வாரிசு சான்றிதழை நான் வாங்கினேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 யை படித்து பார்த்தேனா என்றால் சரியாக படித்து பார்க்கவில்லை. வா.சா.ஆ.10 உத்தரவை வருவாய் துறையில் விசாரித்தால்தான் எந்த ஆவசணத்தின் அடிப்படையில் கொடுத்தார்கள் என்று உண்மை தன்மை தெரியும். எனக்கு அந்த ஆவணத்தை பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியில்ல. எனவே வா.சா.ஆ.10 யை பொறுத்து எனக்கு இவ்வழக்கில் எந்த உத்தரவு பெறுவதற்கு உரிமை இல்லை அதன் அடிப்படையில் எந்த பரிகாரமும் கிடைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல.

4. நான் ராமதாஸ் என்பவரின் வாரிசு இல்லை. இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் அவ்வாறு இல்லாதால்தான் நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்தவித ஆவணமும் தாக்கல்

செய்யாமல் 9ம் பிரதிவாதியை விசாரணை செய்யாமல் வருவாய் துறை கொடுத்த வா.சா.ஆ.10 செல்லதக்கதல்ல இவ்வழக்கின் பிரதிவாதியை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல.